RESEARCH ARTICLE

DOI: 10.34256/irjt2224s-22245

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



OPEN ACCESS

# நாட்டார் வழிபாட்டுப் பரவல்: பாப்பாத்தி அம்மன்

**மு. அரவிந்** [அ, *]

[அ] தமிழ்த்துறை, மாநிலக் கல்லூரி (தன்னாட்சி), சென்னை-600005, தமிழ்நாடு, இந்தியா

# Spread of Folk Worship: Paappaaththi Amman

**M. Aravind** [a, *]

[a] Department of Tamil, Presidency College (Autonomous), Chennai-600005, Tamil Nadu, India

* Corresponding Author: aravind.yuvan001@gmail.com

Received: 27.09.2022
Revised: 02-11-2022
Accepted: 06-11-2022
Published: 01-12-2022

**ABSTRACT**

The spread of a cult system from one place to another is called cult diffusion. This article explains the factors behind the spread of Papathi Amman worship in Chennai, which is followed in southern districts. It records the historical background given orally for the origin of the worship of Goddess Papathi. It also mentions about the location of Papathi Amman. In the context of Sanskritization, the worship of Goddess Papathi is explained by the expansion of Natar worship. It has been said that the worship of Goddess Papapati, cannot be included in the definition of religions. Attempts to institutionalize the Natar deities along with the Vedic deities have been explained, and the Natar deities are not worshiped as temples. The developmental stage of Papathi Amman as elevation is described in this article. The spread of Natar cults is due to various factors. The factors responsible for the spread of Papatti Amman worship are examined by highlighting three main factors. This article examines in detail the spread of Papathi Amman worship in the background of Sanskritization and Vedicization.

**Keywords:** Femicide, Female Deities, Mud Temple, Displacement

## முன்னுரை

பத்தொன்பதாம் நூற்றாண்டுக்குப் பிறகு நாட்டார் வழக்காற்றியல் தனித்த ஆய்வுத் துறையாக வளர்ச்சிப்பெற்று வருகிறது. எண்ணற்ற ஆய்வுகள் இதுவரை வெளிவந்திருந்தாலும் அவை போதுமானவையல்ல. இன்னும் மேற்கொள்ள வேண்டிய ஆய்வுகள் ஏராளம் உள்ளன. தற்காலத் தமிழியல் ஆய்வுச் சூழலில் நவீன ஆய்வுப் போக்குகளோடு நாட்டார் ஆய்வுகளைக் கவனப்படுத்த வேண்டிய தேவை இருக்கிறது. நாட்டார் வழக்காற்றியலில் வழிபாட்டுக்குத் தனி இடம் உண்டு. ஏனைய வழக்காறுகளும்கூட வழிபாடுகளோடு பின்னிப்பிணைந்ததே. வழிபாட்டுப் பரவல் என்பது நாட்டார் ஆய்வுகளில் தனித்தக் கூறாகும். அந்த வகையில் பாப்பாத்தி அம்மனின் வழிபாட்டுப் பரவல் பற்றிய ஆய்வாக இவ்வாய்வு அமைகிறது.

## நோக்கம்

சென்னை ஆதம்பாக்கத்தில் பாப்பாத்தி அம்மன் கோயில் அமைந்துள்ளது. பாப்பாத்தி அம்மன் வழிபாடு சிவகங்கை, புதுக்கோட்டை உள்ளிட்ட தென்மாவட்டங்களில் நடைமுறையில் உள்ள நாட்டார் வழிபாடு. இந்த வழிபாட்டு முறை கோயிலாக வளர்ச்சியடைந்த நிலையில் தலைநகர் சென்னையில் இடம்பெற்றதற்கானக் காரணிகளை இக்கட்டுரை ஆராய்கிறது.

## பாப்பாத்தி அம்மன் வரலாறு

பறையர் சமூகத்தைச் சேர்ந்த ஒரு இளைஞன், பார்ப்பனர் ஒருவர் வீட்டில் வேலை செய்து வந்தான். அவனுக்கும் அந்த பார்ப்பனரின் மகளுக்கும் காதல் மலர்ந்தது. இதனை அறிந்துகொண்ட பார்ப்பனர்கள் அந்த இளைஞனை கொலை செய்யத் திட்டமிட்டனர். இந்த சதியைத் தெரிந்துகொண்டு அந்த பெண்ணும் இளைஞனும் வீட்டை விட்டு வெளியேறினர். அவர்கள் இருவரையும் பார்ப்பனர்கள் விரட்டிச் சென்றனர். பார்ப்பனர்களுக்குப் பயந்து அந்த இருவரும் ஈச்சை பத்தையில் மறைந்தனர். பார்ப்பனர்கள் கற்களால் தாக்கியதில் அவர்கள் இருவரும் காயப்பட்டனர். இருப்பினும் அந்தப் பெண்ணுக்குப் பலமான அடி படவே அவள் இறக்கும் நிலைக்குச் சென்றாள்.

அவள் இறக்கும் தருவாயில் 'நீ என்மீது வைத்த அன்பிற்கு நான் உன்னையும் உன்னைச் சார்ந்தவர்களையும் தெய்வமாக நின்று காப்பேன்' என்று கூறி தன்னுயிரை விட்டாள். அவளது உடலை அந்த இடத்திலேயே அடக்கம் செய்துவிட்டு, அங்கிருந்து ஒரு பிடி மண்ணை எடுத்துவந்து தனது சொந்த ஊரான சிவகங்கையில் வைத்துவிட்டு, நடந்தவற்றை தனது உற்றார் உறவினரிடம் கூறி அவனும் தனது உயிரை விட்டான். அன்று முதல் அவனது உறவினர்கள் அந்த பிடிமண்ணின் மீது பீடம் அமைத்து அப்பெண்ணை பாப்பாத்தி அம்மனாக வழிபடுகின்றனர்.

## கோயில் அமைவிடம்

தற்போதைய புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டத்திலுள்ள பாப்பவயல் என்னும் ஊரில் அமைந்துள்ள பாப்பாத்தி அம்மன் கோயிலே முதலில் தோன்றிய கோயிலாகும். பாப்பாத்தி அம்மன் வழிபாட்டை இரண்டு வகையாகக் குறிக்கிறார் ஆறு. இராமநாதன். அவர் பறையர் சமூக மக்கள் வழிபடும் பாப்பாத்தி அம்மன் வேறு, நாடார் சமூக மக்களின் குலதெய்வமான பாப்பாத்தி அம்மன் வேறு என்கிறார் (Ramanathan, 2017).

தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம் அதன் விரிதமிழ் இயக்ககம் (1982-1983) வாயிலாக ஊராய்வுத் திட்டம் என்ற பெயரில் இன்றைய தஞ்சை, நாகை, திருவாரூர், மாவட்டங்களிலும், சமூகவியல் துறையின் (1983-1984) வாயிலாக இன்றைய திருச்சி, பெரம்பலூர் மாவட்டங்களிலும் ஆய்வு மேற்கொண்டது. இந்த ஆய்வில் அனைத்து கிராமங்கள் பற்றிய விவரங்களும் திரட்டப்பட்டன. அத்தகவல்களை ஆறு. இராமநாதன் தனது நூலில் தொகுத்தளிக்கிறார் (Ramanathan, 2017).

அதன்படி பழைய தஞ்சை மாவட்டத்தில் பாப்பாடியம்மன் என்ற பெயரிலும், சிவகங்கை, அருப்புக்கோட்டையிலும், திருச்சி மாவட்டத்தில் 10 இடங்களிலும் பாப்பாத்தி அம்மன் வழிபாடு உள்ளதை அறிய முடிகிறது. இவற்றுள் சிவகங்கை பகுதியில் உள்ள பாப்பாத்தி அம்மன் கோயில் பறையர் சமூக மக்கள் வழிபடும் கோயிலாக ஆறு. இராமநாதன் குறிப்பிடுவது (Ramanathan, 2017). மேற்கண்ட பாப்பாத்தி அம்மன் வரலாற்றோடு பொருந்தி வருகிறது. பாப்பவயல் பகுதியைப் பூர்வீகமாகக் கொண்ட பாப்பாத்தி அம்மன் வழிபாடு பிற பகுதிகளுக்குப் பரவியமை வழிபாட்டுப் பரவலாகப் பார்க்க வேண்டியது.

## சமயங்களும் வழிபாடுகளும்

உலகின் பல்வேறு நாகரிகங்களிலும் தவறாமல் இடம்பெறும் பண்பாக இருப்பது வழிபாட்டு முறைமைகள். இந்த வழிபாட்டு முறைமைகளின் வளர்ச்சியடைந்த போக்கை சமயங்கள் என்று வரையறை செய்கிறோம். இந்தியச் சமூகத்தைப் பொறுத்தவரையில் தற்காலச் சூழலில் வைதீகச் சமயம் பெரும்பான்மை மக்களால் பின்பற்றப்படுகிறது. சமணம், பௌத்தம் உள்ளிட்ட அவைதீகச் சமயங்கள் சமஸ்கிருதமயமாக்கலின் பின்னணியில் வைதீகத்தில் உள்ளடக்கப்பட்டுவிட்டன. அவைதீகச் சமயங்கள் வைதீகமயமாக்கலின் தொடர்ச்சியாக நாட்டார் வழிபாடுகளும் வைதீகமயமாக்கப்பட்டு வருகின்றன.

நாட்டார் வழிபாட்டு மாபுகள் சமயங்களிலிருந்து மாறுபட்ட தனித்தன்மைக் கொண்டவை. தே. லூர்து நாட்டார் வழிபாடுகளை சமயங்கள் அல்ல என்பதை பின்வருமாறு மறுத்துக் கூறுவார். “சமயம் என்ற சொல் ஒழுங்கமைப்புக்கு உட்படுத்தப்பட்டு நிறுவனமயமாக்கப்பட்ட ஒன்றிற்கே பொருந்தும். அது சில வரையறைகளுக்குக் கட்டுப்பட்டு இறுக்கமான அமைப்பாகத் திகழும். வழிபாடுகள் அத்தகையவையல்ல” (Lourdu, 2016).

## சமஸ்கிருதமயமாக்கல்

நாட்டார் வழிபாட்டு மரபை பார்ப்பனிய, சமஸ்கிருதமயமாக்கலுக்கு முன்னும் பின்னும் என்று வகைப்படுத்த வேண்டியிருக்கிறது. சமஸ்கிருதமயமாக்கலின் பிறகுதான் நாட்டார் வழிபாடு என்ற தனிப்பிரிவு சமூகத்தில் தோன்றுகிறது. பார்ப்பனிய வருணாசிரமக் கொள்கையின் வெளிப்பாடாக உழைக்கும் பெரும்பான்மை மக்களுக்கு வழிபாட்டு உரிமையும் கோயில் நுழைவும் மறுக்கப்பட்டபோது அதன் எதிர்வினையாக ஏற்கனவே இருந்த வழிபாட்டு முறைகளில் பரவலாக விரிவடைந்ததே நாட்டார் வழிபாடுகள். அவர்கள் தங்களின் முன்னோர்களையும், இறந்த கன்னியர்களையும், குழந்தைப்பெறாமல் இறந்த பிள்ளைத்தாச்சிப் பெண்களையும் தெய்வங்களாக வழிபடத் தொடங்கினர்.

நாட்டார் வழிபாடு என்று தனிமரபாக விரிவடைந்ததன் காரணப் பின்னணியில் உருவானதே சைவ மடங்களும் ஆதீனங்களும். பார்ப்பனியத்தால் வழிபாடு மற்றும் அர்ச்சகர் ஆகும் உரிமை மறுக்கப்பட்ட சைவ வேளாளர்கள் தங்களுக்கென்று தனியே சைவ மடங்களைத் தொடங்கினர். உழைக்கும் மக்கள் நாட்டார் வழிபாட்டை தங்களுக்கென்று விரிவாக்கிக்கொண்டதும், ஆதீனங்கள், மடங்கள் தோன்றியதும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய எதிர்வினைகள். இந்த எதிர்வினைகளின் தொடர்ச்சியே பத்தொன்பதாம் நூற்றாண்டில் வீரியம்பெறத் தொடங்கிய கோயில் நுழைவுப் போராட்டங்கள். இது அண்மையில் தமிழ்நாடு அரசு கொண்டுவந்த அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகும் சட்டம் வரை தொடர்கிறது.

## தெய்வங்கள் இணைப்பு

நாட்டார் தெய்வங்களை சிறுதெய்வங்கள் என்றும் வைதீக தெய்வங்களை பெருந்தெய்வங்கள் என்றும் வழங்கும் போக்கு ஒழிக்கப்பட வேண்டியது. இந்த நடைமுறை பாகுபாடுடையது. அடித்தள மக்கள் வழக்காற்றிலுள்ள தெய்வங்களை சிறுதெய்வம் என்றும், ஆதிக்கச் சமூக மக்களின் தெய்வங்களை பெருந்தெய்வம் என்றும் வழங்குதல் சொற்பயன்பாட்டின் ஏற்றத்தாழ்வை விளக்குகிறது.

நாட்டார் தெய்வங்களை வைதீக தெய்வங்களோடு இணைத்து சமஸ்கிருதமயமாக்கும் வேலைகள் பன்னெடுங்காலமாக நடைபெற்றுவருகிறது. தீப்பாய்ந்த அம்மன் சீதையாக்கப்படுவதும், ஐயனாரப்பன் ஐயப்பனாக்கப்படுவதும், முருகன் சுப்பிரமணியனாக மாற்றப்பட்டதும் இதன் அடிப்படையிலேயே. இந்து சமய நிறுவனமயமாக்கல் முயற்சியில் இவை நடக்கின்றன.

நாட்டார் பெண் தெய்வங்கள் பற்றி நா. வானமாமலையின் கருத்துக்கள் குறிப்பிடத்தக்கவை. பெண் தெய்வங்களில் பெரும்பாலானவை மூர்க்க தேவதைகளே. பரட்டைத்தலை, கொட்டை விழி, கோரப்பற்கள் முதலிய அசுரத் தோற்றங்கள் எல்லாத் தேவதைகளுக்கும் பொதுவானவை. அவர் இத்தகையத் தோற்றங்களை பெண்ணாதிக்கச் சமுதாயத்தின் எச்சமாகப் பார்க்கிறார் (Vanamamalai, 1964).

யக்ஷி என்ற சமண சமயத்தைச் சேர்ந்த தேவதை இசக்கி என்ற நாட்டார் தெய்வமாக மாறியது. காளி வங்கத்திலிருந்து பண்பாட்டுத் தொடர்பின் காரணமாக இங்குக் குடியேறியது. கருநாடக மாநில கொத்துப் பல்லாரியில் ராஜ கம்பள நாயக்கர்கள் சமூகத்தின் தெய்வம் ஜக்கம்மாள். அவர்கள் இங்கு வந்தபோது அவர்களுடன் அந்த வழிபாடும் வந்தது. நாட்டார் தெய்வங்கள் வைதீகத்திற்குச் சென்றது போன்றே, சமணம் உள்ளிட்ட அவைதீக சமயங்களிலிருந்தும், கருநாடகம், வங்கம் உள்ளிட்டப் பகுதிகளிலிருந்தும் அச்சமூக மக்களின் நாட்டார் தெய்வங்கள் தமிழர் நாட்டார் வழிபாட்டில் கலந்தன.

ஒரு குடும்பம், சாதி வழிபடும் தெய்வம் ஊர்த்தெய்வமாகவும் வட்டாரத் தெய்வமாகவும் மாற்றம் பெறுவது இதன் அடிப்படையிலேயே. பாப்பாத்தி அம்மன் வழிபாடு பறையர் சமூக மக்கள் வழிபாட்டிலிருந்து விலகி பொதுத்தன்மைக்குள் சென்றிருப்பதைக் காண முடிகிறது. இது இயல்பாகவும் நடந்திருக்கிறது, திட்டமிட்டும் நடந்திருக்கிறது. இதனை ஆறு. இராமநாதன் மேல்நிலையாக்கம் என்று சுட்டுகிறார் (Ramanathan, 2017). அவர் பின்வருமாறு தனது கருத்தைப் பதிவு செய்கிறார்.

"தாழ்த்தப்பட்ட மக்களின் குடும்பத்தெய்வ வழிபாடு அல்லது குலதெய்வ வழிபாடு, ஊர்த்தெய்வ வழிபாடாக மாற்றம்பெறும்போது உயர்சாதியினர் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த பூசாரியை மாற்றிவிட்டு உயர்சாதிப் பூசாரியை நியமிப்பர். இதனைத் தாழ்த்தப்பட்ட மக்களிடையே வழங்கும் கதைகள் தெளிவுபடுத்துகின்றன."

## பிடிமண் கோயில்கள்

மக்கள் பல்வேறு காரணங்களுக்காக ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு இடம்பெயர்ந்து செல்லும்போது பழைய வழிபாட்டிடங்களிலிருந்து ஒருபிடி மண்ணை மஞ்சள் துணியில் முடித்து உடன் எடுத்துச் சென்று புதிய குடியிருப்புப் பகுதியில் வைத்துக் கோயிலாக வழிபடும் பழக்கத்தையும் காணமுடிகிறது. இத்தகைய கோயில்களை பிடிமண் கோயில்கள் என்று ஆறு. இராமநாதன் குறிப்பிடுகிறார் (Ramanathan, 2017). இதனை நா.இராமச்சந்திரன் ஒரு பகுதியின் தெய்வம் வேறொரு பகுதியில் பரவியமைக்கான முதன்மைக் காரணமாகக் குறிப்பிடுகிறார் (Ramachandran, 1987). பாப்பாத்தி அம்மன் வரலாற்றில் பிடிமண் எடுத்து முதன் முதலில் பீடம் எழுப்பியதை இதனோடு பொருத்திப் பார்க்க வேண்டியிருக்கிறது.

"நாட்டுப்புறத் தெய்வங்களுக்குக் கோயில் கட்டுவது சமீபகால வளர்ச்சிநிலை என்று கருதலாம். (மாரியம்மன், காளியம்மன், ஐயனார் ஆகிய தெய்வங்களுக்குக் கட்டப்பட்டுள்ள கோயில்கள் சற்றுப் பழமையானவை). நிரந்தரமாக சிமெண்ட் வைத்துக் கட்டப்பட்டுள்ள பீடங்கள் கூட பிற்கால நிலையே ஆகும். இவற்றை நோக்கும்போது வெற்றிடங்கள், ஆயுதங்கள், மரத்தடிகள், பீடங்கள், கற்கள் முதலியனவே பழமையான வழிபாட்டிடங்கள், வழிபடுபொருட்கள் என்றும் ஏனையவை பிற்கால வளர்ச்சி நிலைகள் என்றும் அறிய முடிகிறது. இவை குடும்பத் தெய்வ வழிபாட்டிற்குரிய இறப்பிடங்கள், சமாதிகள் முதலானவற்றோடு ஒப்பிட்டுச் சிந்திக்கத்தக்கவை என்பதை உணரலாம்" என்று ஆறு. இராமநாதன் குறிப்பிடுகிறார் (Ramanathan, 2017).

பாப்பாத்தி அம்மன் உட்பட நாட்டார் தெய்வங்களின் வழிபாட்டிடங்கள் பல இடங்களில் சராசரி கோயில்கள் போன்ற தோற்றத்தை எட்டியிருக்கின்றன. இது ஆறு. இராமநாதன் குறிப்பிட்டதைப் போன்று கால வளர்ச்சியில் ஏற்பட்டவை. இதனை பொருளாதார வளர்ச்சியோடும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். சென்னை ஆதம்பாக்கத்தில் உள்ள பாப்பாத்தி அம்மன் வழிபாட்டிடமும் சராசரி கோயில் வடிவிலேயே உள்ளது குறிப்பிடத்தக்கது.

## நாட்டார் தெய்வங்களின் பரவலுக்கான அடிப்படைகள்

நாட்டார் தெய்வங்கள் குறிப்பிட்ட குடும்பம், சாதி, ஊர் மக்களால் வழிபாடு செய்யப்படுவது. இத்தெய்வங்களுள் சிலவற்றிற்கு அவற்றின் சொந்த ஊரைக் கடந்து வேற்று ஊர்களிலும் பல்வேறு வழிபாட்டிடங்கள் அல்லது கோயில்கள் உள்ளன. இந்தப் பரவல் ஆய்வுக்குரியது. நா. இராமச்சந்திரன் இதற்கு மூன்று காரணங்களைக் கூறுகிறார்.

1. தன் ஊரிலிருந்து மற்றொரு ஊருக்கு குடிபெயர்பவர்கள் தாங்கள் வழிபட்ட தெய்வத்தை, குடிபெயரும் ஊருக்கும் கொண்டுச் செல்வது வழக்கம். அவ்வாறு செல்லும்போது தெய்வம் உறைந்த பீடத்திலிருந்து பிடிமண் எடுத்துச்சென்று, குடிபெயரும் ஊரின் ஓரிடத்தில் அம்மண்ணைப் போட்டு, அத்தெய்வத்திற்குப் பீடமமைத்து வழிபடுவர்.
2. வணிகம், உறவினர்களின் சடங்குகள் போன்ற காரணங்களுக்காக வெளியூர் சென்றுத் திரும்பும்போது ஏதேனும் நோய், துன்பம் ஏற்பட்டால் அவற்றிற்குக் காரணம் தெய்வக்

குற்றம் என்று கூறுவது மரபு. அதன்பின் சாமியாடியை அழைத்துக் குறி கேட்பர். அப்போது வெளியூரிலிருந்து தெய்வம் தொற்றிக்கொண்டு வந்து தொல்லைக் கொடுப்பதாகவும், அத்தெய்வத்தை அமைதிப்படுத்த பீடமமைத்து வழிபாடு செய்யுங்கள் என்று சாமியாடி குறி சொல்வார். அதனடிப்படையில் குறிப்பிட்டத் தெய்வத்திற்கு கோயில் எழுப்பி வழிபடுவர்.

3. குடும்பத்தில் தீராத துன்பம், நோய் போன்றவை ஏற்பட்டப் பின்பு அக்குடும்பத்தில் ஒருவருக்கு தெய்வம் கனவில் தோன்றி தனக்கு பீடம் அமைத்து, கொடை கொடுத்து வழிபாடு செய்யுமாறு கட்டளை இட்டதால் அவ்வாறு பீடம் அமைத்து வழிபடுவர் (Ramachandran, 1987).

அறுதியிட்டு கூறமுடியாவிட்டாலும் நா. இராமச்சந்திரன் கூறும் காரணங்களுள் முதல் காரணமான குடிபெயர்ச்சி சென்னை ஆதம்பாக்கத்தில் பாப்பாத்தி அம்மன் கோயில் தோன்றுவதற்கு அடிப்படையாக இருக்கலாம் என்ற கருதுகோள் எழுகிறது. அப்பகுதி மக்களுள் பெரும்பான்மை பட்டியல் சமூக மக்களாக இருப்பதும், கோயிலை நிர்வகிப்பவர்களும் அதே சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பதும் இந்தக் கருதுகோளுக்கு வலுசேர்க்கின்றன.

இப்பகுதி மக்கள் முன்னர் பழைய சென்னை நகரில் குயில் குப்பம் என்ற இடத்தில் வாழ்ந்து வந்தவர்கள். குடிசைப் பகுதியாக இருந்த குயில் குப்பத்தை அரசு அப்புறப்படுத்தித் தற்போதைய ஆதம்பாக்கத்தில் அம்மக்களை குடியமர்த்தியது. இம்மக்கள் சென்னையின் பூர்வக்குடிகள். அவர்களுள் சென்னைக்குப் பிழைக்க வந்தவர்களும் உண்டு. அதன் பின்னர் இவர்களோடு பல்வேறு மாவட்டங்களிலிருந்து சென்னைக்குப் பிழைக்க வந்த மக்கள் கலந்தனர். அதில் தென்மாவட்டங்களும் அடக்கம். இப்போதும் தென்மாவட்டங்களைப் பூர்வீகமாகக் கொண்ட மக்கள் அங்கு உள்ளனர். எனவே அம்மக்கள் வாயிலாக பண்பாட்டுத் தொடர்ச்சியாக பாப்பாத்தி அம்மன் வழிபாடு சென்னை ஆதம்பாக்கத்திற்கு வந்தது என்று கருதலாம்.

## முடிவுரை

வழிபாட்டிடமானது பீடம் என்ற நிலையிலிருந்து கோயிலாக மாறியது காலநிலை மற்றும் பொருளாதார வளர்ச்சியின்பாற்பட்டது. இது பொதுவாக பிற கோயில்கள் போன்றே ஏற்பட்ட பிற்கால வளர்ச்சி. சென்னை ஆதம்பாக்கத்தில் பாப்பாத்தி அம்மன் வழிபாடு கோயில் என்ற நிலையிலேயே உள்ளது. வழிபாடு சொந்த ஊரிலிருந்து சென்னைக்கு வந்தது மக்களின் குடிபெயர்ச்சியின் காரணமாக நிகழ்ந்தது. பாப்பாத்தி அம்மன் வழிபாடு போன்றே பிற வழிபாட்டு முறைமைகளிலும் இந்தப் பரவல் நிகழ்ந்துள்ளமைச் சுட்டிக்காட்டப்பெற்றுள்ளது. மொத்தத்தில் பாப்பாத்தி அம்மன் வரலாற்றையும் வழிபாட்டுப் பரவலையும் இந்த ஆய்வின் வழியே விளங்கிக்கொள்ள முடிகிறது.

## References

Lourdu, D. (2016) Naattaar Vazhakkaatriyal: Sila Adippadaikal, Folklore Resources and Research Centre, Palayamkottai, India.

Ramachandran, N. (1987) Kumari Maavatta Samooka Kathai Paadalkalin Iyalpukalum Sikkalkalum, Tamil Study Centre, St. Xavier's College, Palayamkottai, India.

Ramanathan, A. (2017) Thamizhar Vazhipaattu Marapukal, Meiyappan Pathippagam, Chidambaram, India.

Vanamamalai, N. (1964) Thamizhar Naattu Paadalkal, New Century Book House, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License